# உடன்பிறப்பே... 91

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த உடுமலை வெ.காளியப்பன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# உடுமலை வெ.காளியப்பன் இல்லமும் உள்ளமும் கழகம்!




**1956** ஜனவரி 17,18 -இல் 'தமிழர் திருநாள் விழா', இன்றைய திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரில், திராவிடக் குடும்பங்களின் சமத்துவ விழாவாகக் கழகத்தவர்களால் நடத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா கலந்துகொண்ட அந்த நிகழ்வு, இரண்டு நாள் விழாவாக , அன்றைய ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தினர், கொண்டாடிய பண்பாட்டு விழா.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பங்கேற்ற அந்த நிகழ்வைச் சிறப்பாக நடத்தி, அண்ணாவின் பாராட்டைப் பெற்ற அவரது தம்பி, காளியப்பன். கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் தொண்டர்களில் ஒருவராகத் தொடங்கி, தூண்களில் ஒருவராக இணைந்தவர். 1952-ஆம் ஆண்டில் உடுமலை நகரக் கழகத்தின் முதல் நகரச் செயலாளர்.

கழகத்தின் தொடக்கக் காலங்களில், மிக விரைவில் மக்களின் நம்பிக்கை பெற்ற பகுதிகளில் ஒன்று உடுமலைப்பேட்டை. கழக முன்னோடிகள் சாதிக் பாட்சா, உடுமலை நாராயணன் ஆகியோருடன் இணைந்து அந்தக் களத்தை வென்றவர்களில் ஒருவர் காளியப்பன்.

1925-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் வெள்ளையன் - முத்தம்மாள். அவர் பள்ளிப் படிப்புக்கு நுழைந்த காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமடைந்து ஒவ்வொரு ஊரிலும் தீயாகப் பரவியது. அப்போது, திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர், 1946-ஆம் ஆண்டில் தன்னை திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்டு தீவிரமாகக் களப்பணியாற்றத் தொடங்கினார். 1947-இல் தீயணைப்புத் துறைப் பணியாளராக அரசுப் பணியில் இருந்தபோது, உடுமலை நகர திராவிடர் கழகச் செயலாளராகவும் களப்பணியாற்றினார்.

பகல் நேரத்தில் அரசுப் பணியும், இரவு நேரங்களில் கழகக் கூட்டமுமாக இருப்பார். அதனால், ஒரு கட்டத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட அவர், அதன் பின்னர் முழுநேரமாக பகுத்தறிவுப் பிரச்சாரப் பணியில் தன்னை ஒப்படைத்துக் கொண்டார்.

1948-ஆம் ஆண்டு இவர் நகரச் செயலாளராக இருந்தபோது, தந்தை பெரியார் தலைமையிலான போராட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில், தடை உத்தரவை மீறி, போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார் பெரியார். அப்போது, அவருடன் சிறைசென்ற ஏழுபேரில் ஒருவர் காளியப்பன்,

## உடுமலைக் களம்

கழகத்தின் தொடக்கக் காலங்களில் உடுமலை நகரம் கழகக் கோட்டையாக இருந்ததை, அன்றைய திராவிட இயக்க இதழ் பதிவுகள் சொல்கின்றன. சாதிக்பாட்சா, உடுமலை நாராயணன் கே.ஏ.மதியழகன் எனப் பல முன்னோடிகளும் உடுமலையில் இருந்து இயங்கியவர்கள். அதனால் தலைமைக் கழகம் அறிவிக்கும் அனைத்துப் போராட்டங்களும் உடுமலையில் மிக வீச்சாக இருக்கும்.

போராட்டக் களம் மட்டுமல்ல, கிளைக் கழகம் கட்டும் களமும் கொந்தளிப்பாக இருக்கும். கழகக் கொடிக்கம்பங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு, கொடிகள் தீ வைத்துக் கொளுத்தப்படும். அந்த அராஜகங்கள், இரவு நேரங்களில் நடக்கும் என்றால், காலையில் முதல் ஆளாக அங்கு சென்று, அந்தப் பகுதி கழகத்தினருக்கு ஊக்கம் கொடுத்து, மீண்டும் கழகக் கொடி ஏற்ற துணை நிற்கும் தூணாக இருந்தவர் காளியப்பன். சில இடங்களில் அந்தப் போராட்டங்களில் அவர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன.

1952-இல் 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்', 'திராவிட நாடு பிரிவினை' பொதுக்கூட்டம் ஆகியவற்றுக்காக சிறை, 1953-இல் 'மும்முனைப் போராட்டம் சிறை', அதே ஆண்டில் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியத்திற்குக் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் சிறை, 1952-இல் விலைவாசி உயர்வுப் போராட்டம் சிறை, 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் சிறை எனத் தொடர்ச்சியாக வீடும், சிறைக் கொட்டடியுமாக அவர் காலம் இருந்தது.

## மொழிவாரி மாநிலம்

1957 ஆம் ஆண்டு மொழி வாரி மாநிலம் பிரிக்கப்பட்டபோது, உடுமலை அருகே இருந்த தேவிகுளம் - பீர்மேடு, ஆகிய பகுதிகளைத் தமிழகத்துடன் மீண்டும் இணைக்க, தொடர் போராட்டங்களை கழகம் தீவிரமாக நடத்தியது. அந்தப் போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தியவர், காளியப்பன் என குறிப்புகள் சொல்கின்றன.

**உடுமலை காளியப்பன் வாழ்ந்த இல்லம், அவர் இறக்கும் வரை கழக அலுவலகம். சாதிக்பாட்சா, நாராயணன், கே.ஏ.மதியழகன், மு.இராமநாதன் ஆகியோர் வளர்ந்த அறிவகமாக இருந்தது.**

## பஞ்சாலைத் தொழிற்சங்கம்

உடுமலைப் பகுதியில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்தியில் கழகம் செல்வாக்குடன் இருந்தது. அதையடுத்து, பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் தொடங்க, அண்ணா வழிகாட்டியபடி, திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் 1956-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அந்த சங்கத்தின் முதல் மாநில மாநாடு 1957-ஆம் ஆண்டு உடுமலையில் நடைபெற்றது. அதில் தலைமைக் கழகத்தின் சார்பில், என்.வி.என் கலந்துகொண்டு உரையாற்றினார்.

1966-இல் தேர்தல் பிரச்சாரத்திற்காக உடுமலை வந்த அண்ணா, 'ஜல்லிப்பட்டி' என்கிற ஊருக்குப் பொதுக்கூட்டத்துக்காகச் சென்றார். அண்ணா செல்வதற்கு முன், கழகக் கொடி கட்டிய காரில் சாதிக்பாட்சா, காளியப்பன் இருவரும் சென்றபோது போடிப்பட்டி திருமூர்த்தி மில் அருகே, காரை வழிமறித்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், அது அண்ணா வந்த வாகனம் என அடித்து நொறுக்கினர். சாதிக்பாட்சா அவர்களும், காளியப்பன் அவர்களும் காயங்களுடன் உயிர்தப்பிய நிகழ்வு கழக வரலாற்றில் அழிக்க முடியாத நிகழ்வு. 'அண்ணாவைக் கொல்ல சதி' என இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நாஞ்சில் மனோகரன் நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

## உன்னை நம்பித்தான் உடுமலை

1967-இல் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தேர்தலில் களம் கண்ட தனது நண்பர் பா.நாராயணனுக்குப் பக்கபலமாக இருந்ததுடன், அவரது வீடே கழகப் பணிமனையாகச் செயல்பட்டது. அதேபோல, சாதிக் பாட்சா அவர்கள், அண்ணா அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சர் ஆனதும், காளியப்பனுக்குக் கடிதம் எழுதினார். 'உன்னை நம்பித்தான் உடுமலையில் கழகப் பணி இருக்கிறது' எனும் அந்தக் கடிதம் கழக உடன்பிறப்புகளின் தோழமைக்குச் சான்று.

1969-இல் அண்ணா மறைவின்போது, அதிர்ச்சி தாங்காமல் உடல்நலம் பாதிக்கப்பட்டு, ஆறு மாதம் மருத்துவ சிகிச்சையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், கலைஞரின் தலைமையை ஏற்ற தம்பிகளில் ஒருவராக, கழக உணர்வில் இயங்கியவர் காளியப்பன்.

## கழகமே கண்

1971-இல் பொதுத் தேர்தல், பொள்ளாச்சி மக்களவைத் இடைத்தேர்தல் பணிகள் என கழகப் பணிகளில் எந்தத் தொய்வும், சோர்வும் இல்லாமல் இயங்கியவர் காளியப்பன். உடல்நலம் சரியில்லாத நிலையிலும் மிசா சிறைவாசம் அவரை விட்டுவிடவில்லை. மிசாவுக்குப் பின்னர், இந்திராகாந்தி தமிழ்நாடு வந்தபோது, பல இடங்களில் கறுப்புக் கொடிகள் காட்டப்பட்டன. அப்போது நடைபெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த காளியப்பன், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுத்தான் உயிர்பிழைத்தார்.

இப்படி கழகப்பணி, சிறை, தாக்குதல்கள் எனக் கழகத்தின் உடுமலை முகமாகச் செயல்பட்ட, காளியப்பன், 1984-ஆம் ஆண்டு, ஜனவரி 8-ஆம் தேதி, இயற்கை எய்தினார். அவரது உடல் மருத்துவமனையில் இருந்து அவரது இல்லத்திற்குக் கொண்டு வந்த பொழுது, உடுமலையில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவுக்கு, கழகத்தினர் திரண்டு நின்றதை இன்றும் நினைவுகூர்கின்றனர் கழகத்தினர்.

உடுமலை காளியப்பன் வாழ்ந்த இல்லம், அவர் இறக்கும் வரை கழக அலுவலகம். சாதிக்பாட்சா, நாராயணன், கே.ஏ.மதியழகன், மு.இராமநாதன் ஆகியோர் வளர்ந்த அறிவகமாக இருந்தது. இரண்டு முறை கழகத்தின் எம்.பி.யாக இருந்த உடுமலை பா.நாராயணன் அவர்கள் 1971-ஆம் ஆண்டு மறைந்தபோது, அவரது உடல் இறுதி மரியாதை செய்யப்பட்ட இடம் காளியப்பன் இல்லம்தான். கழக முன்னோடிகளின் அன்புக்கும், தோழமைக்கும் சான்றான, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு, காளியப்பன் என்றென்றும் நினைவில் வாழ்வார்.

**...துடிக்கும்**

## திராவிட இயக்கங்களின் பெரும் பணி!

சென்னை 48-வது புத்தகக் காட்சி, கடந்த மாதம் 27-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஜனவரி 12-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் புத்தகக் காட்சியில், இளைஞர்கள் மத்தியில் அதிக கவனம் பெற்ற பதிப்பகங்களாக திராவிடக் கொள்கை சார்ந்த பதிப்பகங்கள் உள்ளன. திராவிட இயக்க நூல்கள், வரலாறுகளை வாசிப்பதில், இளையோர் ஆர்வம் கொண்டுள்ளதைப் பலரும் குறிப்பிடுகின்றனர்.

வாலாசா வல்லவன் தொகுத்துள்ள நீதிக்கட்சித் தலைவர்களின் மிக முக்கியமான அரசியல் உரைகள் நூலினை 'திரவிடியன் ஸ்டாக்' வெளியிட்டுள்ளது. 'கருஞ்சட்டை' பதிப்பகம், பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் எழுத்துகள் மற்றும் பொருளாதார வல்லுநர் ஜெயரஞ்சன் எழுதிய 'திராவிடமும் சமூக மாற்றமும்' உள்ளிட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதிய 'சுயமரியாதை இயக்க வரலாறு' நூல் நக்கீரன் பதிப்பகத்தின் பெரிகாம் அரங்கில் கிடைக்கிறது. திராவிடர் கழகத்தின், 'பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் அரங்கு, திராவிட இயக்கத்தின் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு நூல்களை வெளியிடும் கருப்புப் பிரதிகள்,' திராவிட இயக்க நூல்கள்' அனைத்தையும் ஒரே அரங்கில் திரட்டி வைத்துள்ள பெரியார் புக்ஸ், தலைமைக் கழகத்தின் 'கலைஞர் கருவூலம்' விற்பனையகம், இளைஞர் அணி முன்னெடுக்கும் முத்தமிழறிஞர் பதிப்பகம் ஆகியவை அரசியல் செயல்பாட்டாளர்களின் அரங்குகளாக அமைந்துள்ளன.

இந்த அரங்குகளில் நடக்கும் அரசியல் உரையாடல்களும், நூல் அறிமுகங்களும் புதிய வாசகர்கள், இளைஞர்களிடம் தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் பெரும் பணியைக் கொண்டு சேர்த்து வருகின்றன.

## :ப்ளாஷ்பேக்



### இனமானப் பேராசிரியர் வருகையும் வாழ்த்தும்!


தி.விஜயா

என் தந்தை தென்காசி டி.எஸ்.திரவியம், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரச் செயலாளராக இருந்தவர், அதைத் தொடர்ந்து 1986-ஆம் ஆண்டு அவருக்கு, தென்காசி மாவட்டக் கழகம் சார்பில், பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. பேராசிரியர் அவர்கள் வருகை தந்து என் தந்தையை வாழ்த்திப் பாராட்டினார். படத்தில், என் தந்தை திரவியத்துடன், கா.மு.கதிரவன், வைகோ, முன்னாள் மக்களவை உறுப்பினர் டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் ஆகியோர் உள்ளனர்.

**– தி.விஜயா, கீழப்பாவூர், தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### நாடாளுமன்றத்தில் கழகம்!

1957-ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தில், கழகத்தின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. நாமக்கல் தொகுதியில் இருந்து, ஈ.வெ.கி.சம்பத், திருவண்ணாமலை தொகுதியில் இருந்து இரா.தர்மலிங்கம் ஆகியோர் நாடாளுமன்றம் சென்றனர். அவர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படாத நிலையில், "முக்கிய விவாதங்களில் எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாதது ஏன்?" என சம்பத் கேள்வி எழுப்பினார். "தமிழ்நாட்டின் ஆற்றலையும், தகுதியையும் பிரதிபலிக்கிறவர்கள் நாங்கள்" என நாடாளுமன்றத்தில் ஒரு புயலை உருவாக்கினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

710

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131